**பத்திரிகை தகவல் அலுவலகம்**
**இந்திய அரசு**
**சென்னை**

# தற்சார்பு இந்தியா திட்டங்களின் தொகுப்பு 3.0

**புதுதில்லி, நவம்பர் 12, 2020**

**பொருளாதார நிலைமை - பலமான மீட்சி**

- **சிகிச்சையில் உள்ள கொவிட் நோயாளிகள் எண்ணிக்கை 10 லட்சத்துக்கும் அதிகம் என்பதில் இருந்து 4.89 லட்சமாகக் குறைந்துள்ளது. இறப்பு விகிதம் 1.47 சதவீதமாக உள்ளது.**
- **பி.எம்.ஐ. குறியீடு கடந்த மாதத்தைவிட அக்டோபரில் 58.9 சதவீதம் உயர்ந்துள்ளது. சுமார் 9 ஆண்டுகளில் அதிக அளவிலான உற்பத்தி இதன் மூலம் பதிவாகியுள்ளது**
- **மின்சாரப் பயன்பாடு அதிகரிப்பு** அக்டோபர் மாதத்தில் **முந்தைய ஆண்டு இதே மாதத்தில் இருந்ததைவிட 12% உயர்ந்துள்ளது.**
- அக்டோபரில் **ஜி.எஸ்.டி. வசூல்** கடந்த ஆண்டு இதே மாதத்தில் இருந்ததைவிட **10% உயர்ந்துள்ளது**
- **தினசரி ரயில்வே சரக்கு கையாளும் அளவு**, கடந்த ஆண்டைவிட சராசரியாக **20%** உயர்ந்துள்ளது. கடந்த வாரம் 12% அதிகரித்துள்ளது
- கடந்த ஆண்டைவிட **வங்கிக் கடன்** அளவு 2020 அக்டோபர் 23-ஆம் தேதியின்படி 5.1% உயர்ந்துள்ளது

- **பங்குச் சந்தைகள் புதிய உச்சம் தொட்டன, சந்தை நிதியாக்கம் அதிகமாக இருந்தது, எப்.பி.ஐ.களின் நிகர முதலீடுகள் நேர்மறையாக இருந்தன, அன்னியச்  செலாவணி கையிருப்பு - 560 பில்லியன் அமெரிக்க டாலர்கள்**
- ஏப்ரல் - ஆகஸ்ட் காலத்தில் **நேரடி வெளிநாட்டு முதலீடு** 35.37 பில்லியன் அமெரிக்க டாலர்கள் - **கடந்த ஆண்டைவிட 13% உயர்வு**
- **2020-21 மூன்றாவது காலாண்டில் இந்தியப் பொருளாதாரம் நேர்மறை வளர்ச்சிக்குத் திரும்ப வலுவான வாய்ப்புகள் உள்ளன** என்று இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. முந்தைய கணிப்பைவிட ஒரு காலாண்டு முன்னதாகவே இது நடக்கும் என குறிப்பிட்டுள்ளது.
- பொருளாதாரம் மீட்சி பெறுவதற்கு, தேவை அதிகரிப்பு மட்டுமின்றி, வலுவான பொருளாதார வளர்ச்சியும் காரணமாக உள்ளது என்று முன்னணி பொருளாதார வல்லுநர்கள் கூறியுள்ளனர்

## தற்சார்பு இந்தியா திட்டம் 1.0 -

## சில முக்கிய துறைகளில் முன்னேற்றம் (1/3)

**<u>ஒரே நாடு - ஒரே குடும்ப அட்டை:</u>**

- **வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுதல்:** குடும்ப அட்டைகளை எல்லா இடங்களிலும் பயன்படுத்தும் இத் திட்டத்தில் **28 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள்** கொண்டு வரப்பட்டுள்ளன. 2020 செப்டம்பர் 1-ல் இருந்து இது அமல் செய்யப்பட்டுள்ளது;
- இந்த 28 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில், தாங்கள் விரும்பும் இடத்தில் நியாயவிலைக் கடைகள் மூலம் உணவு தானியங்களை வாங்கிக் கொள்ளும் வாய்ப்பை இப்போது **68.6 கோடி** பயனாளிகள் பெற்றிருக்கிறார்கள்.
- மாநிலத்துக்குள் எடுத்துச் செல்லும் வசதியும் இந்த 28 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ளது. மாதம் சுமார் **1.5 கோடி** பரிவர்த்தனைகள் இதில் நடக்கின்றன.

**<u>பிரதமரின் தெருவோர வியாபாரிகள் தற்சார்பு நிதி (பிரதமரின் ஸ்வநிதி):</u>**

- 26.62 கடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன
- ரூ.1373.33 கோடி அளவுக்கு 13.78 லட்சம் பேருக்கு கடன்கள் அளிக்கப்பட்டுளளன.

**<u>குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்கான முனையம் தொடங்கப் பட்டுள்ளது.</u>**

**தற்சார்பு இந்தியா திட்டம் 1.0 -**

**சில முக்கிய துறைகளில் முன்னேற்றம் (2/3)**

- **விவசாயிகள் கடன் அட்டைகள் மூலம் 2.5 கோடி விவசாயிகளுக்கு கடன் வசதி:** இதுவரையில் 183.14 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன; தகுதியுள்ள 157.44 லட்சம் விவசாயிகளுக்குக் கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. ரூ.1,43,262 கோடி அளவுக்கு இரு தவணைகளில் கடன் பெறும் வரம்பு இவற்றுக்கு உள்ளது.
- **பிரதமரின் மத்ஸ்ய சம்பட யோஜ்னா (பி.எம்.எம்.எஸ்.ஒய்.):** 21 மாநிலங்களில் இருந்து பெறப்பட்ட திட்டங்களுக்கு **ரூ.1681.32 கோடி** அளவுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது
- **விவசாயிகளுக்கு நபார்டு மூலம் அவசரகால கூடுதல் செயல் மூலதன நிதியளிப்பு:** இந்த சிறப்பு வசதி மூலம் ரூ.25,000 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

## தற்சார்பு இந்தியா திட்டம் 1.0 -

## சில முக்கிய துறைகளில் முன்னேற்றம் (3/3)

- **ECLGS1.0:**
    - 61 லட்சம் கடனாளிகளுக்கு ரூ.2.05 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளது.
    - 1.52 லட்சம் கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது
- **பகுதியளவு கடன் உத்தரவாதத் திட்டம் 2.0:** ரூ.26,889 கோடி நிதிச் சொத்துகளை கொள்முதல் செய்ய பொதுத் துறை வங்கிகள் ஒப்புதல் அளித்துள்ளன
- **NBFC/HFC-களுக்கு சிறப்பு ரொக்கமாக்கல் திட்டம்:** ரூ.7227 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது
- **மின் விநியோக நிறுவனங்களுக்கு நிதி கிடைக்க வசதி:** 17 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.118,273 கோடி மதிப்புக்கான கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 11 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.31,136 கோடி ஏற்கெனவே பட்டுவாடா செய்யப்பட்டுளளது.

## தற்சார்பு இந்தியா 2.0 - முன்னேற்றம்

- இவை அக்டோபர் 12-ல் அறிவிக்கப்பட்டன
- விழாக்கால முன்பணம் தொடக்கம் - எஸ்.பி.ஐ. உத்சவ் கார்டுகள் வழங்கப்படுகின்றன
- எல்.டி.சி. வவுச்சர் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன
- சாலைப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகங்களுக்கு கூடுதல் மூலதன செலவினத்துக்கு ரூ.25,000 கோடி அளிக்கப்பட்டுள்ளது
- 11 மாநிலங்களுக்கு முதலீட்டு செலவினத்துக்காக ரூ.3621 கோடி வட்டியில்லா கடனாக அளிக்கப்பட்டுள்ளது

## தற்சார்பு இந்தியா 3.0

### 1. வேலைவாய்ப்புக்கு ஊக்கம்

### தற்சார்பு இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம் (1/3)

- புதிய வேலைவாயாப்புகளை உருவாக்குதல் மற்றும் ஊக்கத்தொகையை முறைப்படுத்துதலுக்கு, பிரதமரின் ரோஜ்கர் புரோட்சஹன் யோஜ்னா (பி.எம்.ஆர்.பி.ஒய்.) திட்டம் 31.3.2019 வரையில் அமல் செய்யப்பட்டது
- இத் திட்டத்தின் கீழ் 1,21,69,960 பயனாளிகளுக்கு உதவும் வகையில், 1,52,899 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.8300 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- கொவிட் மீட்சி காலத்தில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்குவதற்கு ஊக்கத்தொகை அளிப்பதற்காக, ``**தற்சார்பு இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம்'' என்ற புதிய திட்டம் தொடங்கப் பட்டுள்ளது**.
- இத் திட்டத்தில் பயனாளிகள் (புதிய தொழிலாளிகள்):-
    - தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்களில் மாதம் ரூ.15,000 /-க்கும் குறைவான ஊதியத்தில் வேலைக்கு சேரும் புதிய தொழிலாளி.
    - ரூ.15,000 /-க்கும் குறைவான ஊதியத்தில் வேலை பார்த்து, கொவிட் காலத்தில் 01.03.2020 முதல் 30.09.2020 வரையிலான காலத்தில் வேலையில் இருந்து வெளியேறி, 01.10.2020 அன்று அல்லது அதற்குப் பிறகு வேலையில் சேர்ந்தவர்கள்

## 1. தற்சார்பு இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம்

### நிறுவனங்களுக்கான தகுதி வரம்புகள் (2/3)

1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்கள், கீழ்க்கண்ட விதிகளின்படி செப்டம்பர் 2020-ல் இருந்த தொழிலாளி என்பதற்கான அடிப்படை விதிகளில் புதிய தொழிலாளியை சேர்த்திருந்தால்:

- நிறுவனத்தின் குறியீட்டு அடிப்படை 50 தொழிலாளிகள் அல்லது குறைவாக இருந்து, **குறைந்தது இரண்டு புதிய தொழிலாளிகள்**
- நிறுவனத்தின் குறியீட்டு அடிப்படை 50 தொழிலாளிகளுக்கு மேல் என இருந்து **குறைந்தது ஐந்து புதிய தொழிலாளிகள்**

2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்கள் திட்டம் தொடங்கியதில் இருந்து அனைத்து புதிய தொழிலாளிகளுக்கும் மானியம் பெறலாம்

3. இத் திட்டம் 2021 ஜூன் 30 வரையில் செயல்பாட்டில் இருக்கும்

## 1. தற்சார்பு இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம்

### மத்திய அரசின் மானிய உதவி (3/3)

1. பின்வரும் நிலைகளில் 01.10.2020 அன்று அல்லது அதற்குப் பிறகு பணியில் சேர்க்கப்பட்ட புதிய, தகுதியுள்ள தொழிலாளிகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் மத்திய அரசு மானியம் அளிக்கும்:

- **1000 தொழிலாளிகள் வரை பணிபுரியும் நிறுவனங்கள்:** தொழிலாளியின் பங்களிப்புகள் (ஊதியத்தில் 12%) & நிறுவனத்தின் பங்களிப்புகள் (ஊதியத்தில் 12%) என மொத்தம் ஊதியத்தில் 24%.
- **1000 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங்கள்:** தொழிலாளியின் வருங்கால வைப்பு நிதி பங்களிப்புகள் மட்டும் (வருங்கால வைப்பு நிதி கணக்கீட்டுக்கான ஊதியத்தில் 12%) .

2. தகுதியுள்ள புதிய தொழிலாளிகளின், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி நிறுவன கணக்குகளில் (UAN) மானியத் தொகை செலுத்தப்படும்

**2. தற்போதுள்ள அவசரகால கடன்**

**உத்தரவாதத் திட்டம் (ECLGS 1.0) ரூ.3 லட்சம் கோடி (1/2)**

- தற்சார்பு இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டது
- இத் திட்டம் **2021 மார்ச் 31 வரையில் நீட்டிக்கப் பட்டுள்ளது**
- முழுக்க உத்தரவாதம் தரப்பட்டது, சொத்து ஜாமீன் அற்றது.
- 29.2.2020 அன்று நிலுவையில் இருந்த கடனில் 20% வரையில் கூடுதல் கடன் கிடைக்கும். 29.2.2020 அன்று ரூ.50 கோடி வரையில் நிலுவை பாக்கி இருந்த, ஆண்டுக்கு ரூ.250 கோடி விற்றுமுதல் உள்ள, 29.2.2020 தேதியின்படி முந்தைய 60 நாட்கள் இந்த தகுதிகள் பெற்ற நிறுவனங்கள் பயன்பெறும்.
- தகுதிபெறும் நிறுவனங்கள் - சிறு குறு மற்றும் நடுத்தர தொழிலகங்கள், வணிக நிறுவனங்கள், வணிக தேவைகளுக்கான தனிநபர் கடன்கள் மற்றும் முத்ரா கடனாளிகள்
- 12.11.2020 தேதியின்படியான நிலவரம்
    - 61 லட்சம் கடனாளிகளுக்கு ரூ.2.05 லட்சம் கோடிக்கு அனுமதிக்கப் பட்டுள்ளது
    - ரூ.1.52 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளது

## 2. ECLGS 2.0 தொடக்கம்:

## நெருக்கடியில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு உதவும் உத்தரவாத கடன் திட்டம் (2/2)

- பின்வரும் நிறுவனங்களுக்கு உச்சவரம்பு வட்டி விகிதத்தில், சொத்து ஜாமீன் இல்லாமல் 100% உத்தரவாதமான கூடுதல் கடன் அளிக்க பயன்படுத்தப்பட வேண்டும் -
  - ✓ **காமத் கமிட்டியால் அடையாளம் காணப்பட்ட நெருக்கடியில் உள்ள 26 துறைகள் மற்றும் சுகாதாரத் துறை தொழில் பிரிவுகளில்** 29.2.2020 தேதியின்படி **ரூ.50 கோடிக்கு மேல் ரூ.500 கோடி வரையில்** கடன் நிலுவையில் உள்ள நிறுவனங்கள்.
  - ✓ அமலில் இருந்த திட்டத்தில் முன்பு தகுதிபெற்று ரூ.50 கோடி வரையில் நிலுவை இருந்த நிறுவனங்கள்
  - ✓ வருடாந்திர விற்றுமுதல் உச்சவரம்பு எதுவும் கிடையாது
  - ✓ 29.2.2020 தேதியின்படி 30 நாட்கள் வரையிலான நிலுவை நிறுவனங்கள் **(SMA 0)**
  - ✓ 29.2.2020 தேதியின்படி இருந்த **நிலுவையில் 20%** வரையிலான கூடுதல் கடன்

- ECLGS 2.0 -ன் கூடுதல் கடனுக்கான தவணைக் காலம் **5 ஆண்டுகளாக** இருக்கும். **அசல் தொகை திருப்பிச் செலுத்த ஓராண்டு அவகாசமும் இதில் அடங்கும்**.
- 31.2.2021 வரையில் இத் திட்டம் அமலில் இருக்கும்
- வேலை வாய்ப்புகளை பராமரித்து, சுமைகளை தாங்குவதற்கு உதவுவதன் மூலம், நெருக்கடியில் உள்ள நிறுவனங்களுக்கு தேவைப்படும் நிவாரணத்தை அளிப்பதாக ECLGS 2.0 இருக்கும். தகுதியுள்ள நிறுவனங்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் அளிக்கும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்கும் இது பயன் தரும்.

## 3. தற்சார்பு இந்தியா திட்டத்தில் 10 முன்னணி துறைகளுக்கு உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்கத்தொகைகள் அளிக்க ரூ.1.46 லட்சம் கோடி (1/2)

- மத்திய அரசு 3 துறைகளுக்கு பின்வரும் வகையில் ரூ.51,335 கோடிக்கு உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது:
    - கைபேசி உற்பத்தி மற்றும் குறிப்பிட்ட மின்னணு சாதன நிறுவனங்களுக்கு ரூ.40,995 கோடி;
    - கிரிட்டிகல் கீ ஸ்டார்ட்டிங் மெட்டீரியல்கள் (KSM), மருந்து இடைபொருட்கள் மற்றும் திறன்மிகு மருந்து உட்பொருட்கள் (API) நிறுவனங்களுக்கு ரூ. 6,940 கோடி
    - மருத்துவ சாதனங்கள் உற்பத்திக்கு ரூ.3,420 கோடி
- உள்நாட்டு உற்பத்தியில் போட்டிநிலையை ஊக்குவிக்க உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தில் மேலும் 10 முன்னணி துறைகள் சேர்க்கப்படும்.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்புக்கு இது கணிசமான ஊக்கம் தரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## 3. தற்சார்பு இந்தியா திட்டத்தில் 10 முன்னணி துறைகளுக்கு உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்கத்தொகைகள் அளிக்க ரூ.1.46 லட்சம் கோடி (2/2)

பின்வரும் துறைகளில் அரசு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை (பி.எல்.ஐ.) அளிக்கப்படும்

| தொழில் துறை | புதிய உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகைகளின் உத்தேச செலவினம் (ரூ. கோடியில்) |
|---|---|
| மேம்படுத்தப்பட்ட செல் இரசாயன மின்கலம் | 18,100 |
| மின்னணு/தொழில்நுட்ப பொருட்கள் | 5,000 |
| வாகனங்கள் & அதை சார்ந்த பொருட்கள் | 57,042 |
| மருந்துகள் | 15,000 |
| தொலைதொடர்பு & நெட்வொர்க்கிங் பொருட்கள் | 12,195 |
| ஜவுளி பொருட்கள் | 10,683 |
| உணவுப் பொருட்கள் | 10,900 |
| உயர் செயல்திறன் சூரியசக்தி ஒளிமின்னழுக்க பொருட்கள் | 4,500 |
| வீட்டு சாதன சரக்குகள் (குளிர் சாதன இயந்திரம் & எல்.இ.டி.) | 6,238 |
| சிறப்பு எஃகு | 6,322 |
| **மொத்தம்** | **1,45,980** |

**4. பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு (பி.எம்.ஏ.ஓய்.)**

**கூடுதலாக ரூ. 18,000 கோடி**

- வீட்டுவசதி மற்றும் ரியல் எஸ்டேட் துறைக்கு புத்துயிரூட்ட கடந்த பல மாதங்களாக பல நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. இதனால் இத் துறையில் ஓரளவுக்கு மீட்சி ஏற்பட்டுள்ளது. (SWAMIH- ரூ.13,200 கோடி செலவிலான 135 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இதனால் கட்டுமானம் நின்றுபோயுள்ள வீடுகள்/அடுக்கு மாடி வீடுகளின் பணிகள் நிறைவு பெறும்)
- இருந்தாலும் இத் துறையில் இன்னும் அதிக வேலைவாய்ப்பு உருவாக மேலும் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.
- **பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு (PMAY-U) 2020-21 பட்ஜெட் ஒதுக்கீட்டைவிட கூடுதலாக ரூ.18,000 கோடி அளிக்கப்படும்**
- **இந்த ஆண்டு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ரூ.8,000 கோடிக்கும் கூடுதலாக இது இருக்கும்.**
- இதனால் 12 லட்சம் வீடுகளுக்கான பணிகள் தொடங்கும், 18 லட்சம் வீடுகள் முடிக்கப்படும்.
- எதிர்பார்க்கப்படும் கூடுதல் வேலைகள் - 78 லட்சம், ஸ்டீல் - 25 லட்சம் டன், சிமெண்ட் - 131 லட்சம் டன்

## 5. கட்டுமானம் & கட்டமைப்புக்கு உதவி - டேவனித் தொகை வைப்பு (EMD) & அரசு டெண்டர்கள் மீதான செயல்பாட்டு உத்தரவாதம் தளர்வு

- ஒப்பந்தங்கள் மீதான செயல்பாட்டு உத்தரவாதம் 5% முதல் 10% என்பதில் இருந்து 3% ஆகக் குறைப்பு
    - சர்ச்சைகள் இல்லாதிருக்கும், இப்போது செயல்பாட்டில் இருக்கும் ஒப்பந்தங்களுக்கு விஸ்தரிக்கப்படும்
    - பொதுத் துறை நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.
    - மாநிலங்களும் இதை ஏற்று செயல்படுத்த ஊக்குவிக்கப்படும்

- **டெண்டர்களுக்கு EMD கேட்கப்படாது.** அதற்குப் பதிலாக ஏல உத்தரவாத அறிவிக்கை செய்ய வேண்டும்
- பொது நிதி விதிகளின் கீழ் **31.12.2021 வரையில் தளர்வுகள் அளிக்கப்படும்**
- முதலீடு முடக்கம் மற்றும் பி.ஜி. செலவுகளால் ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு நிவாரணம் அளிப்பதாக இது இருக்கும்

## 6. குடியிருப்பு ரியல் எஸ்டேட் துறையில் தேவையை அதிகரித்தல்

## கட்டுமான நிறுவனங்கள் & வீடு வாங்குவோருக்கு வருமான வரி சலுகை

- பொருளாதார தேக்கத்தால் குடியிருப்பு வீடுகளின் விலைகள் குறைந்துள்ளன
- தற்போது வருமான வரி சட்டத்தின் 43 சி.ஏ. பிரிவு சர்க்கிள் ரேட் & ஒப்பந்த மதிப்புக்கு இடையில் வித்தியாசத்தை @10% என கட்டுப்படுத்துகிறது - விலைகள் இதைவிடக் குறைவாக இருக்கலாம்.
- **வித்தியாச அளவை 10% என்பதில் இருந்து 20% என உயர்த்த (பிரிவு 43 சி.ஏ.வின் கீழ்) முடிவு செய்யப்பட்டுள்ளது அறிவிக்கப்படும் தேதியில் இருந்து 2021 ஜூன் 30 வரையிலான காலத்திற்கு, ரூ.2 கோடி மதிப்பு வரையிலான குடியிருப்பு கட்டடங்களின் முதன்மை விற்பனைக்கு மட்டும் இது பொருந்தும்.**
- **இந்த வீடுகளை வாங்குவோருக்கு வருமான வரி சட்டம் 56 (2) (x) பிரிவின் கீழ் மேற்படி காலத்துக்கு, பின்தொடர்ச்சி சலுகையாக 20% வரை அளிக்கப்படும்.**
- இதற்குத் தேவையான வருமான வரி சட்ட திருத்தம் செய்யப்படும்.
- வீடு வாங்குவோர் மற்றும் கட்டுவோரின் சிரமங்களைக் குறைப்பதாகவும், விற்காமல் இருக்கும் வீடுகளை விற்பதற்கும் இது உதவிகரமாக இருக்கும்.

**7. கட்டமைப்பு கடன் நிதிக்கு ரூ.1.10 லட்சம் கோடி களம் உருவாக்கம் -**

**NIIF கடன்அமைப்புக்கு ரூ.6000 கோடி பங்கு அளிப்பு**

- நிதியங்கள், களங்கள் மற்றும் செயல்பாட்டு நிறுவனங்களில் 3 NIIF நிதிகளின் உண்மையான முதலீடு ரூ.19,676 கோடி
- **கடன் அளிப்பு களம்** ஒன்றை NIIF முக்கியத்துவ வாய்ப்புகள் நிதியம் உருவாக்கியுள்ளது. இதில் NBFC கட்டமைப்பு கடன் நிதியம் மற்றும் NBFC கட்டமைப்பு நிதி கம்பெனி ஆகியவை உள்ளன.
- இதில் கடன் அளவு - ரூ.8000 கோடி & திட்ட பேரங்கள் ரூ.10,000 கோடி
- NIIF AIFL (AA ரேட்டிங்) மற்றும் IFL (AAA ரேட்டிங்)ஆகியவை திட்ட பத்திரங்கள் உள்பட, சந்தையில் இருந்து ரூ.95,000 கோடி கடன் தொகையைத் திரட்டும்.
- 2025-ஆம் ஆண்டுக்குள் இதன் மூலம் ரூ.110,000 கோடிக்கு கட்டமைப்புக்கான நிதிவசதி அளிக்கப்படும்.
- இந்தக் களத்தில் பங்கு மூலம் NIIF ஏற்கெனவே சுமார் ரூ.2,000 கோடி முதலீடு செய்துள்ளது
- **அரசு பங்கு மூலம் ரூ.6,000 கோடி முதலீடு செய்யும்**
- மீதி பங்குகள் தனியார் முதலீட்டாளர்கள் மூலம் திரட்டப்படும்.

## 8. வேளாண்மைக்கு ஆதரவு

### மானியத்துடன் உரங்கள் அளிக்க ரூ.65,000 கோடி

- 2019-20-இல் 571 லட்சம் டன் உரங்கள் பயன்படுத்தியதில் இருந்து இப்போது 17.8% அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சாதகமான பருவமழை மற்றும் விதைப்பு அளவு அதிகரிப்பால் தேவை அதிகரித்துள்ளது.
- 2016-17-இல் உர பயன்பாடு 499 லட்சம் டன்களாக இருந்தது. 2020-21-இல் அது 673 லட்சம் டன்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- மானிய விலையில் உர விநியோகத்தை அதிகரிப்பதால் 140 மில்லியன் விவசாயிகள் பயன் பெறுவர்.
- வரக்கூடிய சாகுபடி பருவத்தில் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், போதிய அளவுக்கு உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய ரூ.65,000 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

## 9. ஊரக வேலைவாய்ப்புக்கு ஊக்கம் - பிரதமரின் ஏழைகள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு அதிகரிப்பு

- 116 மாவட்டங்களில் பிரதமரின் ஏழைகள் நல்ல வேலை வாய்ப்பு திட்டம் அமலில் உள்ளது. இதுவரையில் ரூ.37,543 கோடி செலவிடப் பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், பி.எம்.ஜி.எஸ்.ஒய். போன்ற பல்வேறு திட்டங்கள் இத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.
- மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 2020-21 பட்ஜெட்டில் ரூ.61,500 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.
- தற்சார்பு இந்தியா 1.0 -வின் கீழ் கூடுதலாக ரூ.40,000 கோடி அளிக்கப்பட்டது.
- இதுவரையில் இத் திட்டத்தின் கீழ் ரூ.73,504 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 251 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன
- நடப்பு நிதியாண்டில் **பிரதமரின் ஏழைகள் நல வேலைவாய்ப்பு திட்டத்திற்கு கூடுதலாக ரூ.10,000 கோடி அளிக்கப்படும்**.
- கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை இது வேகப்படுத்தும்.

## 10. ஏற்றுமதித் திட்டங்களுக்கு ஊக்கம் அளித்தல் -

## கடன் அளிக்க எக்ஸிம் வங்கிக்கு ரூ.3000 கோடி

- IDEAS திட்டத்தின் கீழ் வளரும் நாடுகளுக்கு இந்திய அரசின் சார்பில் எக்ஸிம் வங்கி கடன்கள் (எல்.ஓ.சி.) அளிக்கிறது.
- கடன் பெறும் நாடுகள் எல்ஓ.சி. மதிப்பில் 75% அளவுக்கு கட்டாயமாக இந்தியாவிடம் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்ற விதியின் மூலம், இந்தியாவின் ஏற்றுமதியை இது ஊக்குவிக்கிறது.
- ரயில்வே, மின்சாரம், மின் பகிர்மானம், சாலை மற்றும் போக்குவரத்து, வாகனம் மற்றும் வாகன பொருட்கள், சர்க்கரை உற்பத்தி உள்ளிட்ட துறைகள் இதன் கீழ் வரும்.
- இன்றைய தேதி வரையில், 811 ஏற்றுமதி ஒப்பந்தங்களுக்கு, மொத்தம் 10.50 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு எல்.ஓ.சி. முறையில் கடன் அளிக்கப்பட்டுள்ளது.
- IDEAS திட்டத்தின் கீழ் எல்.ஓ.சி. முறையில் ஏற்றுமதியை ஊக்குவிக்க **எக்ஸிம் வங்கிக்கு ரூ.3,000 கோடி அளிக்கப்படும்**.

## 11. மூலதனம் மற்றும் தொழில் துறை ஊக்குவிப்பு

- மூலதனம் மற்றும் தொழில் துறை செலவினத்துக்கு ரூ.10,200 கோடி கூடுதல் பட்ஜெட் ஒதுக்கீடு அளிக்கப்படும்
    - உள்நாட்டுப் பாதுகாப்பு சாதனம்
    - தொழில்துறை ஊக்கத் தொகைகள்
    - தொழில்துறை கட்டமைப்பு
    - பசுமை எரிசக்தி

## 12. கொவிட் தடுப்பூசி தயாரிப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு நிதி

- இந்தியாவில் கொவிட் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு, உயிரி-தொழில்நுட்பத் துறைக்கு, கொவிட் பாதுகாப்பு இயக்கத்துக்கு ரூ.900 கோடி அளிக்கப்படுகிறது

## மூலதனம் உள்ளிட்ட கூடுதல் செலவு

| | |
|---|---|
| அனைவருக்கும் வீடு - PMAY-U | ரூ. 18,000 கோடிகள் |
| ஊரக வேலைவாய்ப்புக்கு ஊக்கம் | ரூ.10,000 கோடிகள் |
| கொவிட் பாதுகாப்பு - இந்திய தடுப்பு மருந்து தயாரிப்புக்கு ஆராய்ச்சி & மேம்பாடு நிதி | Rs. 900 கோடிகள் |
| தொழில் துறை கட்டமைப்பு, தொழில் துறை ஊக்கத் தொகைகள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு சாதனம் | ரூ.10,200 கோடிகள் |
| ஏற்றுமதித் திட்டத்திற்கு ஊக்கம் - எக்ஸிம் வங்கிக்கு உதவி | ரூ.3,000 கோடிகள் |
| தற்சார்பு உற்பத்திக்கு ஊக்கம் - உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை | ரூ. 1,45,980 கோடிகள் |
| வேளாண்மைக்கு உதவி - உர மானியம் | ரூ. 65,000 கோடிகள் |
| கட்டமைப்புக்கு ஊக்கம் - NIIF கடன் வைப்பு நிதிக்கு பங்கு நிதி | ரூ. 6000 கோடிகள் |
| தற்சார்பு இந்தியா வேலைவாய்ப்பு திட்டம் (ஒட்டுமொத்தமாக ரூ.36,000 கோடி) | ரூ. 6,000 கோடிகள் |
| **மொத்தம்** | ரூ. **2,65,080 கோடிகள்** |

## இதுவரை அறிவிக்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்களின் தொகுப்பு

| **வ. எ** | **பொருள்** | **ரூ. (கோடியில்)** |
|---|---|---|
| 1. | பிரதமரின் ஏழைகள் வேலைவாய்ப்பு திட்டங்கள் தொகுப்பு (PMGKP) + | 1,92,800 |
| 2. | தற்சார்பு இந்தியா திட்டம் 1.0 | 11,02,650 |
| 3. | PMGKP உணவு திட்டம் - ஜூலை முதல் நவம்பர் வரை 5 மாதங்களுக்கு நீட்டிப்பு | 82,911 |
| 4. | தற்சார்பு இந்தியா திட்டம் 2.0 (அக்டோபர் 12) | 73,000 |
| **5.** | தற்சார்பு இந்தியா திட்டம் 3.0 | **2,65,080** |
| 6. | 31 அக்டோபர் 2020 வரையில் ரிசர்வ் வங்கி அறிவித்த திட்டங்கள் | 12,71,200 |
| | **மொத்தம்** | **29,87,641** |